
# படிப்பு உதவிகள்

# ஏரோதுகளில் சிலர்

*பின்வரும் அட்டவணையானது மகா ஏரோதுவின் மகன்களில் மூன்றுபேர்களையும் (இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மனைவியர்களுக்குப் பிறந்தவர்கள்) அவர்களில் ஒருவருடைய சந்ததியாரில் இருவரையும் காண்பிக்கிறது.*[1] *இந்த அட்டவணையானது ஏரோது அந்திப்பாவுக்கு ஏரோதியாளுடன் இருந்த உறவைப் புரிந்து கொள்ள உதவக்கூடும்.*




*"ஏரோது பிலிப்பு 1" என்பவன் லூக்கா 3:1ல் குறிப்பிடப்பட்ட காற்பங்கு தேசாதிபதியல்ல. ஏரோது பிலிப்பு 1 என்பவன் ரோமாபுரிக்கு நாடு கடத்தப்பட்டான். சலோமி என்பவள் ஏரோதியாளுக்கும் ஏரோது பிலிப்பு 1 என்பவனுக்கும் மகளாய் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.*

---

குறிப்பு

[1]*ஏரோது குடும்பம் பற்றிய அதிகம் முழுமையான அட்டவணைக்கு, "அப். நடபடிகள் 3" என்ற புத்தகத்தில் 68ம் பக்கத்தில் காணவும்.*

# கலிலேயாக் கடல்

*கலிலேயாக் கடல் யோர்தான் நதிப்பள்ளத்தாக்கின் வடக்கு முனையில் உள்ளது. இது மதில் சூழ்ந்த நகரம் மற்றும் மாவட்டம் ஒன்றின் நினைவாக (யோசு. 19:35; 1 இரா. 15:20) கின்னரேத் (அல்லது கின்னரோத்) கடல் என்று பழைய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டது (எண். 34:11; யோசு. 12:3; 13:27). இது புதிய ஏற்பாட்டில் கலிலேயா மாகாணத்தின் பெயரினால், வழக்கமாக கலிலேயாக் கடல் என்று அழைக்கப்படுகிறது. இதை லூக்கா கெனசெரேத் கடல் என்று குறிப்பிட்டார் (லூக். 5:1); கெனசெரேத் என்பது இந்தக் கடலின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு பகுதியாகும் (மத். 14:34). இந்தக் கடல் பிற்பாடு இதன் மேற்குக் கரையில் இருந்த ஒரு நகரத்தின் பெயரால் திபேரியாக் கடல் (யோவா. 6:1; 21:1) என்று அழைக்கப்பட்டது. குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக நாம் தண்ணீர் நிறைந்த இப்பகுதியைக் கலிலேயாக் கடல் என்று மட்டுமே குறிப்பிடுவோம்.*


*இந்தக் கடலானது பேரிக்காய் வடிவத்தில், சுமார் பதிமூன்றுக்கு ஏழு மைல்கள் அளவுடையதாக, சராசரி கடல் மட்டத்தில் இருந்து சுமார் எழுநூறு அடிகள் தாழ்ந்ததாக அமைவுபெற்றுள்ளது. இந்தக் கடலின் உயர்ந்தபட்சம் ஆழம் சுமார் 150 அடிகளாக உள்ளது. இது குன்றுகளாலும் மலைகளாலும் சூழப்பட்டுள்ளது, அவைகள் அறுநூறு முதல் ஆயிரம் அடிகள் வரை உயரம் கொண்டுள்ளன. அவ்வப்போது குளிர்ந்த காற்றானது உயர் மட்டங்களிலிருந்து கடலுக்குள் அவசரமாக நுழைவதுண்டு, இது கடலின் மேல்மட்டத்தில் மாபெரும் அலைகளை உருவாக்கி வீசியடிக்கச் செய்யும்.*

*இந்தக் கடலானது தண்ணீரைப் பெற்றுக் கொண்டும் வெளியேற்றிக் கொண்டும் இருப்பதால், இதன் தண்ணீரானது தூயதும் தெளிவானதுமாக இருப்பதுடன், இதில் ஏராளமான மீன்களும் உள்ளன (இது சவக்கடலின் நிலைமைக்கு நேர்மாறானதாக உள்ளது). கிறிஸ்துவின் காலத்தில், இதைச் சுற்றிலும் நகரங்கள் இருந்தன, அந்த நகரங்களில், இந்தக் கடலின் ஆழங்களில் பிடிக்கப்பட்ட மீன்களை விற்க ஆயத்தச் சந்தைகள் இருந்தன. "மீன் பிடிக்க, போக்குவரத்திற்கு உதவ, மற்றும் உல்லாசப் பயணம் செல்ல என்று ஆயிரக்கணக்கில் படகுகள் இந்தக் கடலின் மேற்பரப்பில் போய் வந்து கொண்டிருந்தன, அதனால் அந்தப்பகுதி முழுவதும் சக்தி மற்றும் வளமை ஆகியவற்றின் கவன ஈர்ப்பு மையமாக விளங்கிற்று."[1]*

---


*குறிப்பு*

[1]James Stalker, *The Life of Jesus Christ* (Chicago: Fleming H. Revell Co., 1981), 59.


பெனிக்கியா
தாண்
கலிலேயா
ஹாட்டின்
குன்று
கெனசரேத்
சமவெளி
கப்பர்நகூம்
கலிலேயாக்
கடல்
கானா?
நாசரேத்
திபேரியா
எஸ்தரலோன் பள்ளத்தாக்கு
சமாரியா

# இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்:

| | |
|---|---|
| *மாபெரும் கலிலேய ஊழியத்தின் தொடக்கம்*<br>*(மத். 4:12; மாற். 1:14, 15; லூக். 4:14, 15)* | *கலிலேயா* |
| *கப்பர்நகூமில் வந்த வாசம்பண்ணுதல்*<br>*(மத். 4:13-17; லூக். 4:31)* | *கப்பர்நகூம்* |
| *முழுநேர சீஷத்துவத்திற்கு மனிதர்களை அழைத்தல்*<br>*(மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11)* | *கப்பர்நகூம்* |
| *ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவி பிடித்திருந்தவனைக் குணமாக்குதல்*<br>*(மாற். 1:21-28; லூக். 4:31-37)* | *கப்பர்நகூம்* |
| *குணமாக்குதலின் பல அற்புதங்கள்*<br>*(மத். 4:23-25; 8:14-17; மாற். 1:29-39; லூக். 4:38-44)* | *கப்பர்நகூம் & கலிலேயா* |
| *தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்குதல்*<br>*(மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-15)* | *கலிலேயா* |
| *திமிர்வாதக்காரர் ஒருவரைக் குணமாக்குதல்*<br>*(மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26)* | *கப்பர்நகூம்* |
| *மத்தேயுவை அழைத்தல்; மத்தேயு விருந்தளித்தல்*<br>*(மத். 9:9-17; மாற். 2:13-22; லூக். 5:27-39)* | *கப்பர்நகூம்* |
| *பெதஸ்தா குளத்தின் அருகில் குணமாக்குதல்*<br>*(யோவா. 5:2-47)* | *எருசலேம்* |
| *ஓய்வுநாள் பாரம்பரியங்களுக்கு எதிரான தற்காப்புவாதம்*<br>*(மத். 12:1-14; மாற். 2:23-3:6; லூக். 6:1-11)* | *கப்பர்நகூம்* |
| *பன்னிரு அப்போஸ்தலர்களை நியமித்தல்*<br>*(மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-19)* | *ஹாட்டின் ஹார்ன்ஸ் (?)* |
| *மலைப் பிரசங்கம்*<br>*(மத். 5-7; லூக். 6:20-49)* | *ஹாட்டின் ஹார்ன்ஸ் (?)* |
| *நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்குதல்*<br>*(மத். 8:1, 5-13; லூக். 7:1-10)* | *கப்பர்நகூம்* |
| *விதவையின் மகனை உயிரோடெழுப்புதல்*<br>*(லூக். 7:11-17)* | *கலிலேயா* |
| *இரண்டாம் கலிலேயப் பயணம்*<br>*(லூக். 8:1-3)* | *கலிலேயா* |


பலஸ்தீனம்
சீரியா
திராகொனித்தி
சீதோன்
பெனிக்கியா
தீரு
தாண்
பாசான் மாவட்டம்
கலிலேயா
கொரேசின்
கப்பர்நகூம்
பெத்சாயிதா
ஹாட்டின் ஹார்ன்ஸ்
கலிலேயாக் கடல்
கானா?
நாசரேத்
நாயீன்
தெக்கப்போலி
எஸ்தரலோன் சமவெளி
அயினோன்?
சாலிம்?
சமாரியா
மகா கடல்
யோர்தான் நதி
சீகார்
கெரிசீம் மலை
பெரேயா
“யோர்தானுக்கு அப்பால்”
எருசலேம்
பெத்லகேம்
யூதேயா
சவக் கடல்
மெக்காரூஸ்
இதுமேயா

# அப்போஸ்தலர்கள்

• **பேதுரு** - *இவர் சீமோன் என்றும் அறியப்பட்டார். இவரது பெயர், "பாறை" என்று அர்த்தப்படும் கேபா என்று மாற்றப்பட்டது. இவர் யூதர்களின் மத்தியில் சுவிசேஷ ஊழியத்தை நடத்தினார் மற்றும் 1, 2 பேதுரு நிருபங்களை எழுதினார். இவர் மாற்கு சுவிசேஷத்தை எழுதுவதிலும் உதவியிருக்கக் கூடும்.*

• ***அந்திரேயா*** - *இவர் பேதுருவின் சகோதரர், இவர் பேதுருவை இயேசுவிடம் அறிமுகப்படுத்தினார் (யோவா. 1:40-42). இந்த சகோதரர்கள் பெத்சாயிதா ஊரில் மீனவர்களாயிருந்தார்கள்.*

• ***யாக்கோபு*** - *இவர் யோவானின் சகோதரர். இவ்விருவரும் செபதேயு மற்றும் சலோமி ஆகியோரின் மகன்களாவார்கள், இவர்கள் பெத்சாயிதா வில் தங்கள் தந்தையுடன் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சில வேளை களில் "பெரிய" யாக்கோபு என்று அழைக்கப்பட்ட இவர் எருசலேமிலும் யூதேயாவிலும் பிரசங்கித்தார். இவர் கி.பி. 44ல் ஏரோதுவினால் தலை வெட்டப்பட்டு, அப்போஸ்தலர்களில் முதல் ரத்தசாட்சியாக மரித்தார்.*

• **யோவான்** - *இவர் யாக்கோபின் சகோதரர். இவ்விருவரும் தங்கள் தந்தையுடன் மீனவர்களாய் இருந்தார்கள் (மாற். 1:19, 20). இவ்விரு சகோதரர்களையும் இயேசு "இடிமுழுக்கத்தின் மக்கள்" என்று அழைத்தார் (மாற். 3:17). யோவான், சிறிய ஆசியாவில் இருந்த சபைகளில் விசேஷமாக எபேசுவில் ஊழியம் செய்தார். கி.பி. 95ல் இவர் பத்முதீவுக்கு நாடு கடத்தப்பட்டார், அங்கே இவர் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். இவர் தம் எழுத்துக்களில் யோவான் சுவிசேஷமும், 1, 2, 3 யோவான் நிருபங்களும் உள்ளடங்குகின்றன.*

• ***பிலிப்பு*** - *இவர் பெத்சாயிதா ஊரிலிருந்து வந்தவர். இவர் இயேசுவைப் பற்றி நாத்தான்வேலுக்குக் கூறினார் (யோவா. 1:44-46).*

• ***பற்தொலோமேயு*** - *இவர் அநேகமாக யோவான் சுவிசேஷ விவரத்தின்படி(யோவா. 1:44-46)யான நாத்தான்வேலாக இருக்கலாம். இவர் கலிலேயாவின் கானா என்ற ஊரைச் சேர்ந்தவர்.*

• **தோமா** - *இவர் திதிமு ("இரட்டையர்") என்றும் அழைக்கப்பட்டார் (யோவா. 11:16; 20:24; 21:2). இவர் கலிலேயாவைச் சேர்ந்தவர். சீரியா நாட்டில் இவர் கிறிஸ்தவத்தை நிலைநாட்டினார் என்று அந்த நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களால் உரிமைகோரப்பட்டுள்ளார்; இவர் பெர்ஸியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலும் சபைகளை நிலைநாட்டியிருக்கக் கூடும்.*

• ***மத்தேயு*** - *இவர் லேவி என்றும் அறியப்பட்டார், இவர் அல்பேயு வின் மகனாயிருந்தார் (மத். 9:9; மாற். 2:14). இவர் கப்பர்நகூம் ஊரைச் சேர்ந்தவர், ரோம அரசாங்கத்திற்கு வரிவசூலிப்பவராகப் பணியாற்றினார்.*

• ***யாக்கோபு*** - *சில வேளைகளில் இவர் "சின்ன" யாக்கோபு என்று அழைக்கப்பட்ட இவர், அல்பேயு மற்றும் மேரி ஆகியோரின் மகனாயிருந் தார் (மத். 10:3; 27:56). (யாக்கோபுவும் மத்தேயுவும் சகோதரர்களாய்*

*இருந்திருக்கக் கூடுமா? இது நமக்குத் தெரியாது.) இவர் கலிலேயாவில் இருந்து வந்தவர் மற்றும் இவர் யாக்கோபு நிருபத்தை எழுதியிருக்கிறார்.*

• ***ததேயு*** *- யாக்கோபின் மகன், இம்மனிதர் யூதாஸ் அல்லது யூதா என்றும் அழைக்கப்பட்டார் (மத். 10:3; லூக். 6:16). இவர் ஒரு கலிலேயர்.*

• ***செலோத்தே என்ற சீமோன்*** *- இவர் கானானியன் என்றும் அழைக் கப்பட்டார், இது "செலோத்தே" என்பதற்கு இன்னொரு வார்த்தையாகும், இது அரமாயிக் சொற்றொடரில் இருந்து ஒலிபெயர்க்கப்பட்டது. சீமோன் கலிலேயாவிலிருந்து வந்தவர்.*

• ***யூதாஸ்காரியோத்*** *- "ஸ்காரியோத்" என்பது அநேகமாக, இவர் யூதேயாவில் இருந்த கீரியோத் என்ற ஊரில் இருந்து வந்தவர் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதாக இருக்கலாம். இவர் இயேசுவைக் காட்டிக் கொடுத்து விட்டு தற்கொலை செய்துகொண்டார்.*

• ***மத்தியா*** *- யூதாஸ்காரியோத்தின் மரணத்திற்குப் பின்பு அவரது இடத்தை நிரப்புவதற்காக இவர் தேர்ந்து எடுக்கப்பட்டார் (அப். 1:26). அப். 1:22ல் இருந்து, மத்தியா "யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு இயேசு பரத்திற்கேறிய வரைக்கும்" இயேசுவோடும் அவரது சீஷர்களோடும் இருந்தார் என்று நாம் அறிகின்றோம்.*

• ***பவுல்*** *- முதலில் சவுல் என்றும் பின்பு பவுல் என்றும் அறியப்பட்ட இவர் சபையை உபத்திரவப்படுத்தியவர், பின்பு புறஜாதிகளுக்கு விசேஷித்த அப்போஸ்தலராக இருக்கும்படி அழைக்கப்பட்டார் (ரோமர் 11:13; 1 கொரி. 1:1; 9:1; 15:9; 2 கொரி. 12:12; கலா. 1:1; 1 தீமோ. 2:7). இவருக்கு இயேசு தமஸ்கு செல்லும் சாலையில் தரிசனமானார். இவர் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை எழுதினார்.*

*அப்போஸ்தலர்கள் என்பவர்கள் கர்த்தருடைய விசேஷித்த செய்தி யாளர்களாக, அவரால் நியமிக்கப்பட்டவர்களாக, அவரது வாழ்வு மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிச் சொந்தமான சாட்சியம் தரக்கூடியவர்களாக இருந்தார்கள். யூதாஸ்காரியோத்திற்குப் பதிலாக ஒருவர் நியமிக்கப்பட்ட போது, அந்தப் புதிய அப்போஸ்தலர் இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் அவருடனும் அவரைப் பின்பற்றியவர்களுடனும் இருந்திருக்க வேண்டியதாயிற்று (அப். 1:21). பிற்பாடு, பவுலைப் புறஜாதியாருக்கு அப்போஸ்தலராகும்படித் தகுதிப்படுத்துவதற்காக அவருக்குக் கிறிஸ்து தரிசனமானார் (1 கொரி. 15:8ஐக் காணவும்) இங்கு பட்டியலிடப்பட்டுள்ள தகவல்களில் சில,* Frank L. Cox, "The Glorious Company of the Apostles," *The Minister's Monthly* (February 1960): 254. *என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

# வேத வசனங்களில்* பட்டியலிடப்பட்டுள்ள அப்போஸ்தலர்கள்

| *மத்தேயு 10:2-4* | *மாற்கு 3:16-19* | *லூக்கா 6:13-16* | *அப். நட. 1:13* |
|---|---|---|---|
| சீமோன் பேதுரு | சீமோன் பேதுரு | சீமோன் பேதுரு | பேதுரு |
| அந்திரேயா | யாக்கோபு | அந்திரேயா | யோவான் |
| யாக்கோபு | யோவான் | யாக்கோபு | யாக்கோபு |
| யோவான் | அந்திரேயா | யோவான் | அந்திரேயா |
| பிலிப்பு | பிலிப்பு | பிலிப்பு | பிலிப்பு |
| பர்த்தொலொமேயு | பர்த்தொலொமேயு | பர்த்தொலொமேயு | தோமா |
| தோமா | மத்தேயு | மத்தேயு | பர்த்தொலொமேயு |
| மத்தேயு | தோமா | தோமா | மத்தேயு |
| அல்பேயுவின் மகன் யாக்கோபு | அல்பேயுவின் மகன் யாக்கோபு | அல்பேயுவின் மகன் யாக்கோபு | அல்பேயுவின் மகன் யாக்கோபு |
| ததேயு | ததேயு | | |
| செலோத்தே என்னப்பட்ட சீமோன்** | செலோத்தே என்னப்பட்ட சீமோன் | செலோத்தே என்னப்பட்ட சீமோன் | செலாத்தே என்னப்பட்ட சீமோன் |
| | | யாக்கோபுவின் மகனான யூதா | யாக்கோபுவின் மகனான யூதா |
| யூதா ஸ்காரியோத்து | யூதா ஸ்காரியோத்து | யூதா ஸ்காரியோத்து | |

*புள்ளியால் குறியிட்ட வரிகள், ''கூட்டத்தின் புயல்'' என்ற பாடத்தில் விவாதிக்கப்பட்ட தொகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

**கிரேக்க மொழியில் மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில் "செலோத்தே" என்பதற்குப் பதிலாக மாறுபட்ட வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (KJVயில் காணவும்), ஆனால் அது இதே அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

# யோனாவின் அடையாளம்

*உயிர்த்தெழுதல் பற்றிப் பிரசங்கிப்பதில் எப்போதுமே மதிப்பு உள்ளது. இப்படிப்பட்டதொரு பிரசங்கம் பின்வரும் பிரிவுகளுடன் "யோனாவின் அடையாளம்" (மத். 12:38-41; லூக். 11:16, 29, 30, 32) என்ற தலைப்பில் எடுத்துரைக்கப்படக் கூடும்:*

I. *ஆர்வமிக்க ஒரு வரலாறு.* (வேதவசனப் பகுதிகளை விளக்கப் படுத்தவும், "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தையும் "மூன்று பகல்கள் & மூன்று இரவுகள்" என்ற துணைப் பாடத்தையும் காணவும்.)

II. *மறுக்க முடியாத ஒரு உண்மை.* யோனாவின் வரலாற்றினுடைய அங்கீகரிப்புத் தன்மை பற்றிச் சிலர் ஐயப் படுகின்றார்கள், ஆனால் இது உண்மையிலேயே நடந்தது என்று இயேசு உறுதிப்படுத்தி னார். உயிர்த்தெழுதலைச் சிலர் மறுக்கின்றார்கள், ஆனால் ஆதாரங்களை முன் வைக்க முடியும்.

III. *மனதில் பதியும் ஒரு அடையாளம்.* யோனாவின் விடுதலை யானது, அவர் தேவனிடமிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு ஒரு அடையாளமாயிருந்தது. இயேசுவின் உயிர்த் தெழுதல், அவர் தேவனுடைய குமாரனாக உள்ளார் என்பதற்கு ஒரு அடையாளமாயிருக்கிறது. அவர் "தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததினால் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனு மாயிருக்கிறார்" (ரோமர் 1:5).

IV. *தப்பிக்க இயலாத ஒரு முடிவு.* மத்தேயு 12:41, "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததி யாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்" என்று கூறுகிறது (லூக். 11:32ஐக் காணவும்). நாம் "யோனாவின் அடையாளத்தை" ("உயிர்த்தெழுதலை") புறக்கணித்தால், நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம்.

# மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்

*அடையாளத்தைத் தேடியவர்களிடத்தில் இயேசு, "யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" என்று கூறினார் (மத். 12:40). இருப்பினும், இயேசு தமது உயிர்த்தெழுதல் பற்றித் தமது சீஷர்களிடத்தில் கூறியபோது, அவர் "மூன்றாம் நாளிலே" (மத். 16:21; 17:23; 20:19) உயிர்ப்பிக்கப்படப் போவதாகக் கூறினார். அவரது கூற்றின் நிறைவேற்றத்தை நாம் லூக்கா 24:5-8, 13-27 வசனங்களில் காண்கின்றோம்.*

*நாம் கூற முடிந்த வரையிலும், "இயேசு கல்லறையினுள் ஒரு முழு நாளும், இரு முழு இரவுகளும், மற்ற இரண்டு நாட்களின் பகுதிகளும் இருந்தார்."[1] பின்பு ஏன் அவர், "இரவும் பகலும் மூன்று நாட்கள்" தாம் கல்லறையில் இருக்கப்போவதாகக் கூறினார்?* J. W. *மெக்கார்வீ அவர்கள் பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்:*


> *... ஒரு நாளின் பகுதியில் ஒரு நிகழ்ச்சித்தொடரின் தொடக்கமோ அல்லது முடிவோ நடைபெற்றது என்றால், யூதர்கள் அந்த நாளின் பகுதியை ஒரு முழு நாளாகக் கணக்கிட்டார்கள். இயேசு தாம் மூன்று நாட்கள் கல்லறையில் இருப்பதாக மிகச் சரியாகவே பேசினார். யூதர்கள் பின்வரும் மூன்று சொற்றொடர்களைக் கொண்டிருந்தார்கள் ... "மூன்றாம் நாளில்," "மூன்று நாட்களுக்குப் பின்பு," மற்றும் "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்." இவை யாவையும் ஒரே விஷயத்தையே அர்த்தப்படுத்தின: அதாவது, மூன்று பகல்கள், இவற்றில் இருபகல்கள் நாளின் பகுதிகளாய் இருந்திருக்க வேண்டும். நாள் கணக்கானது, மிகச் சரியாக நாள் தொடங்கும் நேரமான சூரியன் மறையும் வேளையிலிருந்து* [*அப். 10:1-30*] *தொடங்காது இருந்தால், மூன்று முழு நாட்களும் இரவுகளும் நான்கு நாட்களாகக் கணக்கிடப்படும். நாட்களை யூதர்கள் கணக்கிடும் முறைமைக்கான எடுத்துக்காட்டுகளுக்கு 1 இரா. 12:5, 12; எஸ்தர் 4:1, 16; மத். 27:63, 64 ஆகியவற்றைக் காணவும்.*[2]

*நேட் கூப்பர் அவர்கள், இயேசுவின் மரணத்திற்கு முன்பு அவரது வாழ்வின் கடைசி நாளை எடுத்து உரைத்து முடிக்கின்ற மற்றும் இயேசு கல்லறையில் இருந்த "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்" என்பதை விவரிக்கின்ற வரைபடம் ஒன்றைத் திட்டமாய் வரைந்தார்.*[3] *அவரது வரைபடத்தின் தழுவலானது கீழே தரப்படுகிறது.*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 306. *நாம் இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் படிக்கும்போது இதைப் பற்றி நாம் இன்னும் விரிவாக விவாதிப்போம்.* [2]Ibid. [3]Nat Cooper, *A Study of the Life of Christ* (Lubbock, Tex.: Sunset International Bible Institute, n.d.), 54.


வெள்ளிக்கிழமை
காலை 6 மணி
சனிக்கிழமை
காலை 6 மணி
ஞாயிற்றுக்கிழமை
காலை 6 மணி
காய்பா
அன்னா
பிலாத்து
சிலுவையில் அறையப் பட்டார் காலை 9 மணி மாற். 15:25
தோட்டம்
மரித்தார் மாலை 3 மணி மத். 27:46-50; மாற். 15:33-37; லூக். 23:44-46
கல்லறை மாற். 15:42-46; லூக். 23:50-54 மத். 27:57-60
மேல் வீடு
— ஓய்வுநாள் —
மத். 27:62; லூக். 23:56
"அவர் உயிர்த் தெழுந்தார்" மத். 28:1-6; மாற். 16:1-6 லூக். 24:1-6 யோவா. 20:1-8
இவ்வரைபடம் யூதர்களின் நாள் கணக்கீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தக் கணக்கீட்டின்படி ஒரு புதிய நாளானது சூரியன் மறையும் வேளையில் சுமார் 6 மணி அளவில் தொடங்கிற்று. ("மூன்றாம் மணி வேளை" மற்றும் "ஒன்பதாம் மணி வேளை" என்று) வேத வாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் நவீனச் சொற்றொடர்களாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன ("காலை 9 மணி," "மாலை 3 மணி").
மாலை 6 மணி
மாலை 6 மணி
மாலை 6 மணி